உ

சிவமயம்.

# வேளாளன்

## தூத்துக்குடி.

ஆசிரியன்:— மு. பொன்னம்பலம்.

வயது 1 | 1105-ஞ சுக்ல௵ கார்த்திகை௴ 1௳ | மாதம் 8

"அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

### தகுந்த முறையில் தலைவர் தேர்தல்.

நாளது நவம்பர் ௴ 1௳ நடைபெற்ற நகரபரிபாலனசபைத் தலைவர் பதவிக்குத் திருவாளர் சி. வ. நல்லபெருமாள்பிள்ளையவர்கள் எதிர்ப்பின்றி ஏகோபித்துத் தேர்ந்தெடுக்கப்பெற்றமைகுறித்துப்பெரிதும் போற்றுகின்றோம். பிள்ளையவர்கள் சென்றவருடம் அங்கத்தினர் தேர்தலிலும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். பிள்ளையவர்கள் எதிர்ப்பின்றி இரு தேர்தலிலும் ஒன்றுபோல் தேர்ந்தெடுக்கப்பெற்றது இதுவே முதன்முறையெனக் கருதுகின்றோம். பிள்ளையவர்களுக்கு இப்பதவிகளை வாங்கிக்கொடுத்தோம் என்றும் இனி இப்பதவிகள் கிடைப்பதருமையென்றும் மார்புதட்டிப்பேசிய சில மக்கள் முன்னிலையில் பிள்ளையவர்கள் இருதேர்தலிலும் எதிர்ப்பின்றி வெற்றிபெற்றமை குறித்து மிகமிக மகிழ்கின்றோம். பிள்ளையவர்கள் தங்கள் மனநலத்தால் குணநலத்தால் செல்வச்சிறப்பால் ஆண்டவன் அருளால் வெற்றிபெறுகின்றார்களேயன்றி வேறில்லையென்பதைத் தாங்கள் ஆக்கிவைத்தோம் என்று இறுமாந்திருப்பார் இனியேனும் உண்மையுணர்வார்களாக.

பிள்ளையவர்கள் வெற்றிபெற்ற மகிழ்ச்சியினும் தேர்தல் முறையை எண்ணி எண்ணி எம் உள்ளம் மிகமிக மகிழ்கின்றது.

தகுந்த முறையாம் இம்முறையைத்தெரிந்து அறிவுறுத்திய அன்பர்களுக்கும் அதற்கு அடங்கி நடக்க இசைந்த இரு அபேக்ஷகர்களுக்கும் அறிவுடை மக்கள் அனைவரும் வாழ்த்து வழங்காமலிருக்கமாட்டார்கள். தேர்தல் வரலாறு:— தலைவர் பதவிக்கு இயற்கையில் திருவாளர்களான சி. வ. ந. அவர்களும் J. L. P. ரோஜ் அவர்களும் அபேக்ஷகர்களாக நின்றார்கள். இருவர்களும் நற்குணம் நல்லொழுக்கம் நிரம்பிய சீமான்கள், ஆடம்பரமற்று அடக்கம்பெற்று அமைதியாய் வாழ்பவர்கள். இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்து நிற்கும் இயல்புடையவர்களுமல்ல; என்றாலும் அற்பக்காசுக்கு ஆசைகொண்டு அலைந்து திரியும் அங்கத்தினர்சிலரால் ஏவப்பெற்று இருவரும் எதிர்த்துநிற்குநிலை வந்து சேர்ந்தது. இருசார்பாளரும் தங்கள் தங்கள் மதிவலிகொண்டும் உடல்வலிகொண்டும் துணைவலிகொண்டும் பொருள்வலி கொண்டும் இரவுபகல் ஓயாது உழைத்துவந்தனர். இந்நிலையில் அற்பக்காசுக்கு ஆசைகொண்டு அலைந்துதிரியும் அங்கத்தினர்களை "மனிதன் விலையில்லா முத்து" என்பதுபோல் தரகர்களால் ஏலத்தில் விடப்பெற்று ஏலத்தொகை விஷம்ஏறியதுபோல் விண்ணென்று உயர்த்தப்பெற்றது. இன்னுஞ்சில அங்கத்தினர்கள் அங்கும் இங்கும் தலையையசைத்தனர்.

இந்நிலைகளை நன்குணர்ந்த அபேக்ஷகர்கள் இருவரும் தங்கள் தங்கள் நிலைமைகளையும் ஒருவாறு செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டுமென எண்ணி ஒருவர், பணத்தை வாரிஇறைத்துப்பதவி பெறுதல் பயனற்றதெனக் கருதினார். மற்றொருவர் பணத்தை வாரி இறைத்தாலும் பதவி கிடைக்குமோ கிடையாதோ என ஐயுற்று அசதியுற்றார். அசதியுற்றார்பக்கம்நின்ற குலத்தைக்கெடுக்கும் கோடாறிக்காம்புகள் கூலிக்கு மாரடிக்கும் கூத்தர்கள் உண்ட வீட்டிற்கு ரெண்டகஞ்செய்யும் துரோகிகள் வெற்றி வெற்றி என்று வீணான ஆசைமொழிகளால் அசதியினின்று நீக்கி ஆர்வத்தை அறைத்துப்புகட்டி கணக்கற்ற பணத்தைக் கையாடக்கருதினர்; என்றாலும் அபேக்ஷகர் அறிவுடையாராதலால் நிலைமையை நன்குணர்ந்து அன்னவர்கள் விரித்தமாயை வலையில் அகப்படா

மல் அக்கம்பக்கம் சூழ்ந்து பார்த்து ஆலோசனைசெய்துகொண் டிருந்தார்.

இவ்வேளையில் அன்பும் அறிவும் நிறைந்த அங்கத்தினர்கள் சிலர் அபேக்ஷகர்களிருவர்களுக்கும் வேண்டியவர்களாதலால் யாருக்கு ஓட்டுச்செய்வது யாருக்கு ஓட்டுச்செய்யாதிருப்பது என்றுள்ள பரமசங்கடமான நிலைமையிலிருந்தார்கள். தங்கள் நிலையைச் செம்மைப்படுத்தவேண்டியும், அபேக்ஷகர்கள் நிலைமைகளையும் கணக்கற்ற பொருளைக் கையாடக்கருதிய கவுன்சிலர்களின் நிலைமைகளையும் செவ்வனே அறிந்து அவைகளைச் செம்மைப்படுத்தவேண்டியும் கருதி, மக்கள்வலியால் பணவலியால் மதிவலியால் பயனில்லையெனக்கண்டு ஆண்டவனருள்வலியே நல்லவழியெனக் கொண்டு திருவருட்சீட்டுப்போட்டு யாருக்குச் சீட்டுக்கிடைக்கிறதோ அவர்கள் தலைவர் பதவிக்கு அபேக்ஷகராக நிற்கவேண்டுமென்றும் மற்றவர் நிற்கக்கூடாதென்றும் சமாதான முடிவுசெய்தனர். முடிவிற்கு இருவரும் இசைந்தனர்.

இசைந்த செய்தியறிந்த வாய்க்கு..........வாங்கி வாழக் கருதிய வன்கண்மையாளர்களுக்கு இடிவிழுந்தாற்போலாயிற்று. என்செய்வார்கள் பாவம்! அங்கும் இங்கும் ஓடினார்கள்; ஆடினார்கள்; பல்லவிகள் பல பாடினார்கள், பலன் தருவதாயில்லை; ஐயோ! என்று அடிசாய்ந்தனர்; அழுதனர்; மாலைப்பொழுதும் நீங்கி இராவுபாதிகழிந்தது. பட்டினியால் படுத்த இடத்திலேயே கிடந்தனர் இரவெல்லாம் தூக்கமில்லை; பற்பலவாறு தமக்குள்ளே எண்ணி எண்ணி சிந்தை நைந்தனர். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதுபோயிற்றே என்றும்; தோணி கிடைப்பது தோல்வியாயிற்றே; வீட்டுமேடை கட்டுவது வீணாயிற்றே; வயல்வாங்க வழியற்றுப் போயிற்றே; ஒத்திவீட்டை மீட்டுவது வித்தையாயிற்றே; அற்ப வட்டிக்கு அதிகப்பணம் வாங்குவது அவலமாயிற்றே; தீபாவழியில் அதிகவிலை ஆடை வாங்கிக்கட்டி அழகுபார்ப்பதற்குக்கூட அதிர்ஷ்டமற்றுப்போனோமே என்றும் பலவாறு கனவுபோலவும் நினைவுபோலவும் நினைந்து அழுதகண்

ணீரும் சிந்திய் மூக்குமாக சிந்தை நொந்து கிடந்தனர். அந்தோ! இவர்கள் நிலை இருந்தவாறு என்னே! இவர்கள் நிலையை நினைக்க நினைக்க நகைப்பிற்கிடமாவதன்றி வேறு ஒன்றுமில்லை. இவர்களா ஜனப்பிரதிநிதிகள்? வறுமை, மக்களுக்கு இயற்கை. வறுமையின் பொருட்டு வஞ்சகத்தால், வாக்குரிமையை விலைகோடலால், புறங் கூறிப் பொய்த்துயிர்வாழுதலால் வாழ்நாளைக்கழிப்பதிலும் மானக் கேடான வாழ்க்கை வேறொன்றுமில்லையென்பதை எண்ணிப்பார்க்கவேண்டுகின்றோம். வழியல்லா வழியில்வந்த பொருள் இருக்கின்றபொருளையும் இழுத்துச்செல்லுமென்பதை ஞாபகஞ்செய்கின்றோம்.

நகரமக்களே! இனி இத்தகையமக்கள் நமது பிரதிநிதிகளாக வராமற்றடுக்கவும் தகுதியுடையாரைத் தேர்ந்தெடுக்கவும்வேண்டுகின்றோம்; காசுக்கு ஆசைவைத்த கயவர்கள் வாயில் மண்ணடிக்க வகைதேடிய அன்பான அங்கத்தினர்களுக்கும் அதற்கிசைந்த அபேக்ஷகர்களுக்கும் அன்னவர்களின் அறிவின்றிறத்தைக்குறித்து நன்றி செலுத்துகின்றோம். இத்தகைய தகுந்த முறையில் தலைவர் தேர்தலை முடிவுசெய்தமைகண்டு பொதுவாக நாட்டுமக்களும் சிறப்பாக நம் நகரமக்களும் மனமகிழ்ச்சியடையவேண்டுவதோடு, மேலால்வரும் தேர்தல்களிலும் இத்தகைய நன்முறைகளைக்கையாளக் கடமைப்பட்டுள்ளார்களென்பதையும் தெரிவிக்கின்றோம். இறுதியாகமக்கள்தேர்ந்தெடுக்கத் தகுதியற்றுப்போன நிலைமையில் அன்பர்கள் சிலர் ஆண்டவன் வழிநிறுத்தி ஆண்டவனருளால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிள்ளையவர்கள் ஆண்டவன் வழிநின்று நடுவுநிலைமையில் நகரமக்கள் நன்மையில் நாட்டங்கொண்டு தொண்டாற்ற வேண்டுகின்றோம். பிள்ளையவர்களின் மனநலனின் மாண்பே திருவருட்சீட்டில் தேர்ந்தெடுக்கப்பெற்றமைக்குக்காரணமெனக் கருதுகின்றோம். "மனம்போல் வாழ்வு" என்பதை ஈண்டு ஞாபகஞ்செய்யாமலிருக்கமுடியவில்லை.

சந்தா நேயர்கள் இன்னும் காலந்தாழ்த்தாமல் விரைவில் சந்தாவை அனுப்பியாதரிக்க வேண்டுகின்றோம்.

# ஔங்கர ஆராய்ச்சி.

---

உயர் திருவாளர் நித்தியானந்தம் அடிகள்.

முன் 7-வது பத்திரிகைத் தொடர்ச்சி.

## சைவம்.

இந்தச் சைவ சமயம் ஆதியந்தமற்றதேயாயினும், இஃது தன் நிலை குன்ற ஆரம்பித்தகாலை, கதர் குன்றிய நிலையில் அதற்கு (மகாத்மா) காந்தி யடிகளால் புத்துயிர் எவ்வாறு அளிக்கப் பெற்றதோ அவ்வாறே, அன்று நம தப்பன் குமாரப்பனெனும் கந்தப்பனும் முருகப்பனின் திருத்தந்தையரான திருச்சிவனடிகளால் புத்துயிர்கொடுக்கப்பெற்று, இன்று மோரளவு நின்றிலவுகின்றது இஃது ஆதிசமயமென்பது "உடற்கூற்று விறபனர், தத்துவசாத்திரிகள் (விஞ்ஞானிகள்), மெஞ்ஞானிகள், வைத்திய நிபுணர்கள், சுகாதாரப்பெரியார்கள், இயற்கைவழிகண்ட முனிவர்கள், பலவித ஆராய்ச்சிப்பேரறிஞர்கள் முதலியவர்கள் மக்கள் முதலிய உயிர்கள் நிலையையும் அதில் உயர்தனி நிலையுடைய மக்கள் தனிநிலையையும், அவர்களின் முதல் தோற்றத்திற் குறைவிடமா யிருந்த நிலத்தின் நிலையையும் நன்காராய்ந்து "இயற்கை சமயம், தானுய் நிகழ—வாழ்ந்துவந்த மதம்" சைவசமயமே என ஏகோபித்த முடிவிற்கூறியுள்ளனர் என்றால் இதை இதனினும் அதிகங்கூற வேண்டுவதில்லை. ஆதலால் இந்த சைவ சமயங்கொண்டுள நிலைகளான "கற்பு—சைவம்—தொண்டு" என்ற முப்பொருட்களைச் சுருக்கிக்கூறுவாம்.

கற்பு:—கற்பென்பது; "கொலை, களவு, கள், காமம், பொய் ஆகிய இவைகளை விலக்கி தத்தம் தேவைக்கும் உரிமைக்கும உட்பட்டவருவாய்க் குரிய அளவில் இயற்றொழில்புரிதல் வேண்டுமென்பதாம்.

சைவம்:—சைவமென்பது; இஃதைக் கண்டாண்டு விண்ட பெரியாரைப் பணிதல் என்பதோடன்றி "உறுதி (நம்பிக்கை—

ஐயமின்மை), ஊக்கம் (தைரியம்—அச்சமின்மை), பொறுமை, அடக்கம், நடுநிலைமை, செய்நன்றி" முதலியவைகளைக் கடைப் பிடித்தல் வேண்டுமென்பதாம்.

தொண்டு:—தொண்டென்பது, தனியே அறுவகைப்படும் அவைகளில்; (1) உடல்நலம்பற்றிய தொண்டு, அஃதறுவகைப் படும். (அ) துயில்கொள்ளல், துயில் நீத்தல், (ஆ) காலைமாலைக் கடன்கள், (இ) தொழில்புரிதல், (ஈ) உணவருந்துதல், (உ) உடை நடை பாவனை, (ஊ) ஆடல் பாடல் புரிதல் என்பனவாம். (2) மனோநலம்பற்றிய தொண்டு, இஃது இருவகைப்படும். (அ) நோன்பு (விரதங்கள்), (ஆ) தொழுகை (வணக்கம்) என்பனவாம். (3) பிறநலம்பற்றிய தொண்டு, இதுவுமிருவகைப்படும். (அ) பிற பொருள் நல்வினை, (ஆ) பிறஉயிர்கள் நல்வினை என்பனவாம். (4) பிறர்நலம்பற்றிய தொண்டு. இதுவுமிருவகைப்படும் (அ) குலத் தொண்டு, (ஆ) தேசத்தார் தொண்டு என்பனவாம். (5) தேச நலத்தொண்டு இஃது வேற்றுமைக்கிடையில் ஒற்றுமை புகட்டும் மதத்தொண்டாகும். (6) அரசியல் தொண்டு, இதுவோ, செங் கோலரசாயின் அதற்கு ஒத்துழைத்தலும், கொடுங்கோலரசாயி னதனிடத்து ஒத்துழையாதிருக்கவேண்டுவதோடு, அதன்முறை யையும் மாற்றப் பாடுபடுதல் வேண்டும் என்பனவாம். ஆகவே இவைகளைக் 'கற்கக்கசடறகற்பவைகற்றபின், நிற்க அதற்குத்தக' என்ற தமிழ்மறைப்படியும், "வைகறைப்பயிற்சியும் இளமையிற் கற்றலும், வையகத்துளார்க்குவானகமீயும்," என்ற உண்மையறி விளக்கப்படியும் கற்றுக்கடைத்தொழுகப் பயின்றுவருதல் வேண் டும். இதுவொன்றே ஔங்காரனுடையவும், ஔங்கர சமயமாம் சைவசமயத்திற்குப் புத்துயிர் கொடுத்த முனிவரான திருச்சிவ னடிகளுடையவும் கடுங்கட்டளையாகும்.

### ஔங்காரனாலடையப்பெறும் பயன் யாது ?

ஔமினால் பெறுதற்குரிய பேறு யாதெனின்? பொருள் பெற்றறம்புரிந்து பேரின்பமுறுதல் என்பதாம். "சுவர்க்கம், நரகம், மோக்ஷம்" என்ற மனக்கோட்டையுலகைப்பற்றி ஒன்றும் கூறுவ

தில்லை. "இறப்புப்பிறப்பு" சுழல் சக்கரம் போன்றதாமென்றும், தமது வினைகட்கேற்பத் தமது செயலே இன்பதுன்பத்தைத்தருவதாமென்றும், ஊனக்கண்ணால் உலகக்காட்சியைக்கண்டு களிப்பது போலவும், விஞ்ஞானக்கருவிக்கண்ணாலும் மனக்கண்ணாலும் பல திறப்பட்ட நுட்பங்களைக் கண்டுகளிப்பது போலவும், ஞானக்கண்ணொன்றால்தான் தன்னை (ஓளங்காரனை)க்கண்டு களிப்புற இயலுமென்றும், இக்களிப்புற "கற்பு-சைவம்-தொண்டு-ஆகிய சைவ சமய ஒழுக்கம், ஒழுங்கு, அறநெறி" என்ற முக்கண்ணொளிதெளிவுறுதலும், இத்தெளிவுபெறுதற்கு நல்வினைஞ்சார்ந்த மனமும், நல்மனஞ்சார்ந்த இனச்சேர்க்கையும் தேவையென்றும், அவைகள் "பெற்றோர், பிறப்புநிலை, வளர்ப்போர், கல்வி, சேர்க்கை, தொழில், வாழ்க்கைத்துணை, கேள்வி, சுவடிகள், சங்கம்" முதலியனவும், இவைகளை ஈய்ந்தருள்பாலிக்க "மெய்க்கல்விக்கழகங்களும்" இவைகளையுண்டாக்கிப் பரிபாலிக்க வல்ல அரசுனை தக்கசாம் குடிகளரசெனும் செங்கோலரசும் ஏற்படுதல்வேண்டும் என்றும் இவைகள் யாவுமிந்நிலையில் ஒருங்குசார்ந்து ஈவதே பேரின்பமென்றும், அஃதொன்றே தன்னால் ஈயப்பெறும் பேரின்பப்பேறென்றும் ஓளங்காரனுலகோர் ஒவ்வொருவருக்கும் வலியுறுத்துகின்றான். ஆதலால்;

ஐயன்மீர்காள்! இக்கட்டுரைப்பொருளையுணரும் நீங்களோவ்வருவரும் இன்றே இப்பேரின்பமுறவும், உங்கள் பரம்பரையினரும் அஃதேபோல் குறைவிலா அவ்வின்பத்தைப் பெறவும் கருதின், ஓளங்காரனருள்சுரத்தற்குரிய ஓளங்காரனாசாம் தன்னரசேற்பட முனைந்து நில்லுங்கள். நாம் அடைதற்குரிய இன்பம் தானாக நம்மைவந்தடையும். ஓளம்!

---

## உயர்ந்த வாழ்க்கை வாழ வகை.

### திரு. C. P. ஆனந்தம் அவர்கள்.

கிழக்கிலுள்ள ஒரு படித்த மனிதனுக்கும்; பட்டிகாட்டி ஒருவனுக்கும் அடியிற் காணும் குறிப்பிடத் தகுந்த சம்பாஷணை

நடந்தது. படகோட்டி, அவன் சஞ்சரிக்கும் பாங்களில் திகழும் இயற்கை வனப்பின் திருவைத் தன்னுள் சுவிகரித்திருக்கின்றான். மற்று, படிபபு வாசனையென்பது கொஞ்சமும் கிடையாது. படித்த மனிதர் தமது கல்லூரிப் படிப்பளவின் தேர்ச்சிகளில் அளவற்ற பெருமைகொண்டிருக்கின்றார். இவர்களிருவருக்கும் இந்த ரீதியில்-கதை நிகழுவதாகும்.

மனோகரமான மாலைப் பொழுது; ரமணியமான மதனறல்; பொன்னைப் பழிக்கும் இரவி கிரணங்களின் சாயை; கரை புரளும் பிரவாகம் நிறைந்த கங்கா நதி; சாகரத்தை நிகர்க்கும் நதியில் ஓடத்தை ஏறிச் செல்வது இவர்கட்கு ஆனந்தமாகவிருக்கும். சுமார் இருபதுவயதான நிறைந்த படித்த அவ்வாலிபன்நல்ல உயரிய ஆடைகள் ஆங்கில நாட்டினரைப் பின்பற்றி அணிந்திருந்தான்; மிகவும் அழகு வாய்ந்தவன்; அந்தஸ்து வாய்ந்த பெருங் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆங்கிலக் கல்லூரிகளில் பயின்று தேர்ச்சியில் பெற்ற தனது பட்டயங்களைப்பற்றி மிகவுங் கர்வங் கொண்டிருந்தான. ஆங்கில மரியாத நாட்டுப் புற வாசிகளை அவன் மிகவும் கழிவிரக்கங் கொள்வான். இந்த இளம் பட்டதாரி கங்கையின் பக்கல் வந்ததும், தயாராகவிருந்த ஒரு ஓடத்தின்மேலேறிக்கொண்டான். ஓடமோட்டி ஓடத்தை நடு ஆற்றை நோக்கிச் செலுத்தலாயினன். நாட்டுப் புற வாசியாயும் படிப்பு வாசனையற்றவனுயுமிருந்த அந்த ஓடமோட்டியைப் பார்த்துஇளம்பட்டதாரி "நீ எப்போதாவது தத்துவசாத்திரம் படித்திருக்கின்றாயா?" என்று கேட்க, படகோட்டி "இல்லை ஐயா!" என்றான். அதற்குப் பட்டதாரி "ஆயின், உனது ஆயுளில் கால் பாகம அவமே கழிந்தது! கணிதம் படித்திருக்கின்றாயா?" என்று வினவப் படகோட்டி "இல்லையே!" என்னவும் பட்டதாரி "அங்ஙனமேல், மற்றொரு கால்பாகம வீணிற் கழிந்தது! "வானசாத்திரம் படித்திருக்கின்றாயோ?" என்று கேட்டான் அதற்கும் படகோட்டி இல்லையென்றே இசைத்து நின்றான். "நல்லது இன்னுமொரு கால் பாகம் உனது ஆயுளில் ஒழிந்து போயிற்றே" என்று நமது பட்டதாரி சொல்லிக்கொண்டிருக்

கையில் ஒரு முதலை படகைத் தன் வாயினுல் தட்டவே, படகோட்டி திரும்பி "ஐயா, தாங்கள் நீந்தக்கூடுமோ" என்று கேட்டான். பட்டதாரி மிகவும் நடுக்கத்துடன் ஈனமான சுவரத்தில் "நீந்தமுடியாதே" என்ருன். "அவ்விதமாயின், உமது ஆயுளின் பூரண பாகமும் ஒழிந்ததே" எனப் படகோட்டி சொல்லிவிட்டுக் கரையேற ஆயாசம் சிறிதுமின்றி முயன்ருன்.

இந்த இரசமான கதையின் படிப்பினைக்குரிய பாகம், இற்றை நாளில் கல்லூரிப் பரீட்சை தேறி, கல்லூரி வாழ்வு விடுத்துப் பிரவர்த்தி உலகில் எந்த இலாகாவில் எந்த வேலை கிடைக்குமென்று பறந்து திரியும் படித்த குழுவினரை உலகியல் அனுபவமற்று வெளிவரும் பள்ளிச் சிறுர்களை நாம் காணும்பொழுதெல்லாம் நமது ஞாபகத்திற்கு மிகவும் விரைவாக வந்துவிடுகின்றது.

ஒருவனின் ஜீவியப் பொழுதை நல்ல முறையில் உயர்ந்த வாழ்க்கையாக நடத்திக்கொள்வதற்குச் சாதகமான பயிற்சிகளைதயாவது தற்காலமுள்ள பல கலை ஸ்தாபனங்கள் நமது சிறுவர்கட்கு ஊட்டி, அம்முறையே மாணவர் குழுவைப் புதுக்கி உருப்படுத்தி வெளியில் அனுப்புகின்றனவா? என்பது ஒவ்வொரு யோசனையுள்ள மனதிற்கும் எழக்கூடிய கேள்வியாகும்.

பல் கலைக் கழகப் பட்டதாரிகளிற பலா கழக்கிலுள்ள நமது படித்த இளைஞரைப் போல தங்களுடைய பாஷா ஞானத் தேர்ச்சிகளைப்பற்றி வெகுவாகப் பெருமைகொண்டிருக்கின்றனர். அத்துடன் அதே பொழுதில் அவர்கள் முன்னுள்ள உலகியல் அனுபவத்து எதிர்ப்படும் அவசியங்களைப்பற்றிய ஞானம் சிறிதுமின்றி படகோட்டியினிடம் படித்தமனிதர் படகு கவிழ்ந்துபோகுந் தறுவாயில் நீந்தத் தெரியாது தவித்தமாதிரி தவிக்கின்றனர் அவர்களுடைய பட்டயங்கள் (Diplomas) அவர்கட்கு ஒரு மாந்திரீகக் கோல்களே போலத் தோன்றுகின்றன; அவை அவர்கட்கு நேரிடும் எந்த சம்பவங்களையும் எதிர்த்து ஜெயம்பண்ணக் கூடியதென்றும், அவர்கள் கோரும் எந்தக் காரியங்களையும் முடித்துத்தர வல்லனவென்றும், அவர்களுக்கு உலக வ்வழ்வி

எல்லா வாயில்களையும் திறந்துவைத்துவிடுமென்றும் வீணே பகற் கனவு கண்டுகொண்டிருக்கின்றனர். ஆனால், அனுபவ வாழ்க்கையிலுள்ள கடினமான தீர்வைகள் வெற்றியின்பத்தைக் கற்றுக் கொடுக்கின்றனவென்பதையும், கல்லூரிப் படிப்பளவைகளைக் காட்டும் பட்டயங்கள் அவர்கள் எதிர்பார்த்த எந்த இலட்சியத்தையும் கைகூட்டி வைக்க சக்தியுள்ளவைகளல்லவென்பதையும் தெரிந்துகொள்வதில்லை. (தொடரும்)

---

## இந்தியர் புறமதம் புகுவதேன்?

(நாங்குனேரி திரு சு. அருணாசலம்பிள்ளையவர்கள்.)

பரதகண்டத்தின் பல சமயங்களுள்
சைவம் வைணவமாகிய விரண்டுமே!
சுருதியுக்தி அனுபவம் மூன்றும்
முறையே பொருந்தமுப்புடைத்தென்பதை
ஆராய்ச்சியாளரறிவாராயினும்!
இவ்விரு மதங்களிலிருந்துவிண்ணெய்திய
பக்திமான்கள் பலர்தம் சரிதையை
உற்றுநோக்கிமுற்ற உணர்ந்தார்
மற்றோர் மதத்தை மனதினும் கருதார்!
எனினும் இந்தியர் இதரமதங்களில்
ஏராளமாக ஏகுதற்குரிய
காரணயாதெனக் கழறக்கேண்மின்!
இப்புவியதனில் இறைவன்வகுத்த
எப்பிறவியினும் ஏற்றமிக்குடைய
இந்தியராகும் மன்பதையாளர்
மேல்கீழ்சாதியாம்மேட்டிமைகொண்டு
தூற்றிச்சிலரைத் தூரநில்லென்பதும்
விலகுவிலகென விலங்கொடுமதிப்பதும்
பின்னவர்புறமதம்போய்ப்புக்காராய்
அன்னியகா[illegible]ராசாரக்கொடு

ஆங்கிலங்கற்று அரசாங்கத்தின்
உத்தியோகத்தால் உயர்த்தப்பட்டால்
சார்க்காரென்றே சமமாய்க்கொண்டு
தொண்டுபுரிவதும் உண்டுகளிப்பதும்
என்னென்றுரைப்பேம்! என்னென்றுரைப்பேம்!
இச்சாதிபேதமாய்சமய இழுக்காய்
எத்தனேமாந்தரை இதரமதங்களில்
இழுத்துச்சென்றதென்றெண்ணவும்போமோ!
அந்தோ! அன்னியநாட்டார் அவர்தம்மதத்தை
அகிலமெங்கும்பரப்புமவாவால்
செய்யும்சூட்சி இவ்வையகமறிந்தும்
நித்தனும்நிமலன்நீழ்நிலவாழ்வில்
பக்தாய்கொண்டுமுத்தியளித்த
சைவசமயத்தறுபத்துமூவர்
வைணவந்தழைக்கவந்தபன்னிருவர்
இல்லறந்துறவற இரண்டின்வழியே
இறைவன்பதமலர்எய்தியபல்லோர்
அத்தனேபெயரையும்ஆராய்ந்துபார்ப்பின்
எக்குலத்தவரென இறையும்எண்ணியதோ!
அவர்தம்ஒழுக்கமுறையால்உயர்வுபெற்றமை
உண்மைநூல்கள் உணர்த்தக்கண்டும்
ஆங்கிலஆட்சி அவ்வழிநின்றும்
நாமேன்! நிட்டூரமாகநின்றிடவேண்டும்.
இவ்வாறிருந்திடின் இந்தியர்பல்லோர்
ஆண்டுகடோறும் அயல்மதமேகி
புறச்சமயத்தொகைபூமியுள்மிகவே!
இந்துசமயம்இருந்தெடந்தெரியா
திறந்துபடுமென இயம்பவும்வேண்டுமோ!
ஆதலீன்! மேதையீர்! ஆண்டவன்படைப்பில்
கீழ்மேலென்னும்கிளேகள்வேண்டாம்!
தாய்நாட்டினரைச்சமமாய்மதித்தே

உண்மைவழியை உலகோர்க்குணர்த்தி
சைவம்வைணவம்தழைத்தோங்கிடவும்
ஒழுக்கமுறையால் உயர்கதிபெறவும்
எல்லாம்வல்லஇறைவன் இணையடி
என்றும்ஏத்திநின்றுதொழுவேம்.

---

## நமது சமய ஒழுக்கம்.

திரு. சங்கரநாராயண தேசிகர் அவர்கள்.

(முன் 6-வது பத்திரிகைத் தொடர்ச்சி)

### சற்குரு.

தக்க பிராயத்திலேயே வித்தியாரம்பஞ் செய்விக்கப் பெற்றும், சமய தீக்கையும் விசேட தீக்கையும் செய்விக்கப்பெற்றும் வடமொழியும் தண்டமிழ் மொழியும் மாண்புறக் கற்ற பின்னர் நிர்வாண தீக்கையும் செய்விக்கப்பெற்று காமிகாதி இருபத்தெண் சிவாகமங்களையும், சிவஞானபோத முதலிய சித்தாந்த சாத்திரங்களையும, தேவார முதலிய தோத்திர நூற்களையுமோதி யுணர்ந்து, ஆசிரிய மந்திரரோட்டுஞ் செய்விக்கப்பெற்று, சிவனிடத்திலும், அடியார்களிடத்திலும், குருவினிடத்திலு மென்றும் நீங்காத அன்பும, உறுதியான பற்றுதலும், சாந்தமும், தயையும், இனிய வசனமும், வைதீக நடையும், இலௌகீக ஆராய்ச்சியும், சரீர வனப்பும், உடற் குற்றமின்மையும், காமக்குரோதமோக உலோப மத மாற்சரியாதி தீய குணமின்மையும், நெறியுறுதொழுகும் நித்திய, நித்தியாங்க, நைமித்திக, நைமித்திகாங்க, காமிய, காமியாங்கமென்னும அறுவகைப்பட்ட கன்மங்களை நிகழ்த்துபவனாகியும் வாய்மையுடையவனாகியும், குறைவிலாது நன்றி யறியுங் குணமுடையவனாகியும் இருத்தல் வேண்டும். இத்தகை அமைந்த உத்தமனெவனோ அவனே நமது சமய குருவெனச் சாற்றலாகும்.

இத்தகைய குருமூர்களிடத்தில் என்ஞான்றும் இறைவனது திருவருள் நிலவுமென்றும் அத்தகையாம் தேசொளியுடையர்

'தேசிகர்' என்றும், விளங்குமாமென்று 'குரு' என்னும் பதப் பொருள் குறித்து ஆகமாந்தரங்களிலே,

"குகாரம் அந்தகாரம் ஸ்யாத், ருகாரம் சந்நிரோதனம்,
அந்தகாரம் நிரோதித்வா, குருசப்தமி ஹோச்யதே"

(இதன் பொருள்) கு. காரம் இருண்மயம். ரு. காரம் அதனைக் கெடுப்பது. இருண்மயத்தைப் போக்கி ஞான ஒளியைக் கொடுப்பதால் 'குரு' என்று சொல்லப்படுவது.

### சுத்த சைவர்கள்.

கருணாநிதியாகிய சிவ பரம்பொருளைக் கனவிலும் மறவாது சிவாகம நெறிவழாது வழிப்பட்டொழுகுவோர்கள் 'சுத்த சைவர்கள்' என்று சொல்லப்படுபவர்கள். அச்சுத்த சைவர்களது இலக்கணம் பொது, சிறப்பென இருவகைப்படும். அவற்றுள்

பொது விலக்கணமாவது = சிவத்திர வியங்கவராதிருத்தல், எவ்வுயிரையும் கொல்லாதிருத்தல், புலாலுண்ணாதிருத்தல், பிறர் பொருளை திருடாதிருத்தல், பிறர் மனைநயவாதிருத்தல், வரைவின் மகளிரை நச்சாதிருத்தல், இரக்கம், வாய்மை, பொறுமை, அடக்கம், இப்போர்க் கீய்தல், தாய், தந்தை, தமைக்கை, தமையன் முதலிய பெரியோர்களை வழிபட்டொழுகி வந்தனைபுரிதல், அறிவற்று நாத்திகம் பேசுவோர்களை பாவிகளென்று வெறுத்தல், தருமஞ்செய்ய விரும்புவோர்களைப்புனிதர்களென்று நட்பாடல், குற்றங்கண்டு பெரியோர்கள் துன்புறுத்தினும் அவர்களை வணங்குதல், அடியார்கள் குற்றம் புரியினும் அது சிவச்செயலென்று மனம பொறுத்தல், கெடுதல் செய்யவரும் பிறசமயங்களை ஒழித்தல் முதலியவைகள் யாவும் பொது விலக்கணங்களாம.

(தொடரும்.

---

வேளாளர்கள் "வேளாளனை" ஆதரியாமல் அன்னிய பத்திரிகைகளை ஆதரிப்பது ஆடையின்றி ஆபரணங்கள் அணிவதை யொக்கும்.

## வேளாளர் நிலைமை.

திரு, இ. வெண்ணிமாலை பிள்ளையவர்கள் B. A., B. L.,
முன் 5-வது பத்திரிகைத் தொடர்ச்சி.

நம தறகால நிலைமை கவலைக்கிடந்தரத்தக்கது என்பது விரிக்காமலே விளங்கும். நம் முற்கால உயரிய நிலைமையிலிருந்து நாம் தற்சமயம் வழுவியிருப்பதற்குப்பல காரணங்களுண்டு. அவற்றில் நம்மில் இருபாலார்களிடத்தும் பொது அறிவு (Gneral culture) குன்றி நம் பெண்மக்களும் நம் செய்கையால் மாக்களாய் மாறினதே முக்கிய காரணமென இதுகாறும் ஒரு சிறிது சொல்லப்பட்டது. இனி இதர காரணங்களையும் சுருக்கச்சொல்லி நம் மரபினரின் முன்னேற்றத்திற்கு அவசியமான வழிகளையுஞ் சுட்டிக்காட்ட உன்னுகின்றேன்.

பண்டை வேளாளரின் உயர்வுக்கு அவர்களிடமிருந்த ஊக்கமும் விடாமுயற்சியும் முக்கிய காரணங்களென முன்னரே கண்டிருக்கின்றோம். இவ்வூக்கம் நம்மனோரில் பெரும்பாலரிடம் உறைமோராகக்கூட இருக்கிறபாடில்லை. பின் ஆக்கம் எங்கிருந்தமையும்? ஊக்கமுடையா னொருவன் உளனேல் அவனிருக்குமிடம் எங்கே? எங்கே? எனவழிவினவிச்செல்லும் ஆக்கம். என்னை

> ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
> வூக்கமுடையா னுழை.

எந்நெறி செல்லினும் ஊக்கமுடையான் ஏக்கமடையான். இதற்குச்சான்று ஸ்கொத்லாந்து தேசத்தரசன் ராபர்ட்புரூஸின் சரித்திரமேயாம். ஆறுதடவல்களாக அவர் மாற்றரசனிடம் தோல்வியடைந்தும் ஊக்கத்தைக் கைவிடாது ஏழாவது தடவலும் எதிரியுடன் போருக் கெழுந்து ஜெயக்கொடியை அதுகாலை நாட்டியும் விட்டார். முயற்சி மெய்வருந்தக்கூலிதரும் என்பது ஆன்றோர் வாக்கு; அனுபவமும் அஃதே. ஒருவன் ஒருதுறையிலிறங்கிய பின் அதை எவ்வகையிலும் நன்முடிவுக்குக் கொண்டுவரவேண்டு

மென்று முனைத்து முயற்சியாது நுனிப்புல்லை மேய்ந்தாற்போல் அத்துறையில் வேலைசெய்தால் அவனுக்கு ஆக்கம் எங்கிருந்து அமையும்?

நம் சிறப்பு வாழ்க்கைத்தொழிலாய வேளாண்மையை எடுத்துக்கொள்வோம். வேளாண்மைக்குவேண்டியது நிலத்தை நேரில் நிலக்காரன் கவனித்து காலத்திற்கேற்றவாறு பக்குவப்படுத்திப் பயிரிடுதல். வேளாண்மை செய்பவனுக்கும் வேலைக்கேற்ற உணவும் வருவாய்க்குத்தகுந்த செலவுமிருக்கவேண்டும். இதைவிட்டு நிலமிருக்குமிடமே நிலக்காரனுக்குத் தெரியாமலும், காலப்பக்குவம், பயிர்செய்முறை முதலியன அறியாது குடிமை வைத்ததே சட்டமென வேளாண்மையை விட்டுவிட்டால் வேளாளன் வேளாண்மையால் விருத்தியடைவதெங்ஙனம்? மேனாட்டு சரித்திர ஆசிரியர்கள் உழவர்களின் தாழ்வை ஆராயுங்கால் அதற்கு முக்கிய காரணம் நிலம் நோக்கா உழவனின் உழவே (absentee landlordism) எனக்கூறுகின்றார்கள்.

இத்தோடு நிற்கின்றதோ நம் வேளாண்மை! காலத்துக்கும் கோலத்துக்கும் ஏற்ப உண்ணுவதே வாழ்வின் சீர்மை. நெற்றியின் வியர்வை நிலத்தில் விழ பெரும்பாலும் வெளி வேலையே (out-door work) செய்யவேண்டுபவன் வேளாளன். நிழலமர்ந்து செய்யும் வேலைக்கு (in-door work) வேண்டிய உடம்பமைப்பு வேறு: வெளியில் வெய்யில் வேலைக்கு (out-door work) வேண்டிய உடம்பமைப்பு வேறு. உடம்பமைப்போ ஊணை வைத்து. ஓர் உடம்பமைப்புக்கமிர்தமாம் ஊண் மற்றொன்றுக்கு நஞ்சாக மாறினும் மாறும்; எனவே வெய்யில் வேலையாளன், நிழல் வேலையாளன் உணவே நவீனமெனக் கொண்டு தனக்குரித்தாய ஊணைக் கேவலமாக் கருதி புறக்கணித்து, உண்ண ஆரம்பித்தானேல் அவன் வேலைக்காய தேகக் கட்டுப்பாடு அவனுக்கு எங்கிருந்து அமையும்? வேலைக்கேற்ற உணவில்லையேல் வேலையில் எங்ஙனம் 'முனைத்து நிற்க முடியும்? சுவரை வைத்தல்லவோ சித்திரம்!

புஞ்சை யுழவன் காலையிலெழுந்து கம்பஞ் சோறுண்டு காட்டுக்குப் போவானேல் கடு வெயிலிலும் களைப்பில்லாமல் நின்று பாடுபட முடியும். அதைவிட்டு பட்டினத்தான் பருகும் காப்பியை நவீனமாக்கொண்டு கம்பஞ் சோற்றைக் கீழ் குலத்தோருணவாக் கருதி, அன்னூன், காப்பியுட்கொண்டு காட்டுக்குச் செல்வானேல், கடிதில் களைப்படைகின்றான். வெயிலில் நின்று வேலைபார்க்க அவனால் இயலவில்லை. மாத்தடியில் ஒன்றிரண்டு நாட்கள் ஒதுங்கிப் பார்க்கிறான். பின்னர் காட்டுக்குத்தான் போவானேன் என வீட்டிலேயே இருந்துவிடுகிறேன் என எண்ணுகிறான். கொஞ்சம் கொஞ்சமாய் காட்டுக்குப் போவது கேவலமென்ற எண்ணமும் அவனிடம் நுழைய ஆரம்பிக்கிறது. அவன் வேளாண்மையும் நிலம் நோக்கா உழவனின் உழவாய்விடுகின்றது. வருவாய் குறைகின்றது: செலவோ அதிகரிக்கின்றது: என்னே இன்னோர் வேளாண்மை! நம் மாயினரின் வேளாண்மையும் பெரும்பாலும் இதைப்போல்வே இருந்துவருகிறது.

(தொடரும்)

தமிழின் தாயகமாய் விளங்கும் உயர் திரு. மஹாமஹோபாத்தியாய,

வே. சாமிநாத ஐயரவர்கள் அபிப்பிராயம்.

---

ஒவ்வொரு ஜாதியாரும் முன்னேற்றமடைவதற்கு, இக்காலத்தில் செய்யும முயற்சிகள் பல. வேளாள சமூகத்தினர் முன்னேற்றமடையும்பொருட்டு, தூத்துக்குடியிலுள்ள மகா-ா-ா-ஸ்ரீ மு. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் வேளாளன் என்னும் மாதப் பத்திரிகை யொன்றை வெளியிட்டுவருகிறார்கள். அதில் சில சஞ்சிகைகளைப்படித்துப்பார்த்தேன். நன்முயற்சி, தெய்வபக்தி சமயவொழுக்கம், தமிழின்வளர்ச்சி முதலிய விஷயங்களைப்பற்றிப்பல எழுதிவருகிறார்கள். பிறஜாதியாரைத் தூஷியாமல் தங்கள்ஜாதியா முன்னேற்றமடையவேண்டுமென்பதற்குரிய விஷயங்களைமட்டும் எழுதிக்கொண்டுபோவது யாவரும பாராட்டத்தக்கது. இந்த பத்திரிகை உத்தேசித்த பயனையளிக்குமென்று எண்ணுகிறேன்

இங்ஙனம

வே. சாமிநாதையர்.

# திருக்குறள் மூலமும் உரையும்.

திரு. பொ. முத்தையா பிள்ளையவர்கள்.

## பாயிரம்.

### அதிகாரம் உ. வான்சிறப்பு.

அஃதாவது மனழயின்து சிறப்பைக்கூறுதல், முதலதிகாரத்தில் கடவுள்வாழ்த்தும், வாழ்த்துதலாலுண்டாம்வீடு அடைதற்பயனுங்கூறி இவ்வதிகாரத்தில் கடவுளைவாழ்த்துதலாலுண்டாம் இம்மைப்பயனாகிய மழையின் சிறப்புக்கூறுகின்றமையால் அதிகாரஇயைபுபெறப்பட்டது. உலகத்தில் நிகழத்தக்க காரியங்களனைத்தும் மழையையின்றி நிகழா; அம்மழையும் கடவுளருளையின்றிப் பெய்யாது; அவ்வருளும் கடவுளை வாழ்த்துதலாலன்றி உண்டாகாது. ஆகையால் உலகம் நடைபெறுதற்கேதுவாகிய மழையின் பொருட்டுக் கடவுளைவாழ்த்தவேண்டுமென்னுங் கருத்துத்தோன்றுதலே இவ்வதிகாரத்தால் நிகழத்தக்கது.

கக. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்த மென்று உணரற் பாற்று.

(இ-ள்) மழை நிலைபெற உலகம் நிலைபெற்றுவருதலால், அம்மழைதான் உலகத்திற்கு அமிழ்தமென்று அறியுந்தன்மையை உடையது. (எ-று)

நின்று என்பது நிலைபெற என்னும்பொருள் குறித்தது. உலகமென்பது உயிர்களையும் உடல் உலகங்களையுங் குறித்தது. உலகம் நிலைபெறுதலாவது, உயிர்கள் உடம்பொடுகூடிவாழ்தல். அமிழ்தம்உண்டார்சாவாது நிலைபெறுதல்போல, உயிர்கள், யாதானும் ஓருடம்போடுகூடி நிலைபெறுதல் மழையினாலாதலின், அம்மழையை அமிழ்தமென்றுணர்க என்றனர். (கி)

(கஉ) துப்பார்க்குத் துப்புஆய துப்புஆக்கி துப்பார்க்குத்
துப்புஆய தூஉம்மழை.

(இ-ள்) உண்பவர்க்கு உணவுப்பொருள்களைத் தோன்றச் செய்து, அவற்றை உண்பவர்க்குத்தானும் உணவாய் நிற்பதும் மழை. (எ-று)

துப்பு—உணவு. துப்பார்—உண்பவர். துப்புஆய என்றவி டத்து ஐயுருபுவிரித்து அற்றுச்சாரியைகூட்டி துப்பாயவற்றை யென்றுரைத்துக்கொள்க. துப்புஆக்கி யென்றவிடத்து துப்பு என்பது பொலிவு. அது தோன்றுதலென்னும் பொருள் குறித் தது. உணவுப்பொருள்களைத்தோன்றச்செய்து பசியை நீக்குத லேயன்றி, உணவாய் நின்று நீர்விருப்பத்தையும் நிறைவேற்ற லின், உம்மை இறந்ததுதழுவிற்று இவ்வாறு செய்தலின், மே லைச்செய்யுளிற்கூறப்பட்ட உலகம் நிலைபெறுதலென்பது சாதிக் கப்பட்டது. (உ)

கங. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

(இ-ள்) மழைவேண்டுங்காலத்துப்பெய்யாது பொய்க்குமா யின் கடலால் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண், பசி நிலை பெற்று உயிர்களை வருத்தும். (எ-று)

விண்-விண்ணினின்று பெய்யும் மழையைக்குறித்தது. விரி நீர்—கடல். உடற்றுதல்—வருத்துதல். உலகம் என்று கூறாது விரிநீர் உலகம் என்றது, கடலிருந்தும் அதனால் பயனில்லையெ ன்பது அறிவித்தற்கு. பசிநிலைபெற்று வருத்துமென்றதனால், உணவின்றி உயிர்கள் இறக்கும் என்றவாறாயிற்று. (ங)

(கச) ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும்
வாரி வளங்குன்றிக் கால்

(இ-ள்) உழவர் ஏரால் உழுதலைச்செய்யார்; மழையென் னும் வருவாயின் வளப்பங்குறைந்தவிடத்து (எ-று)

புயல்—மழையைக்குறித்தது. வாரி—வருவாய். வளப்பம்- செழிக்கப்பெய்தல். மழையில்லையாயின் உணவில்லையெனமேலைச்

செய்யுளில்கூறி, உணவின்மைக்குக்காரணம் உழவர் உழுதலைச் செய்யாமையென இச்செய்யுளால் கூறினர். (ச)

கரு. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

(இ-ள்) வாழ்வாரைப்பெய்யாது கெடுப்பதும், அவ்வாறு கெட்டார்க்குத்துணையாய்ப்பெய்து முன்கெடுத்ததுபோல வாழ்விப்பதும் ஆகிய இவையெல்லாம் செய்யவல்லதுமழை. (எ-று)

மற்றுஎன்பது, கெடுப்பது என்னும் வினையைமாற்றி எடுப்பது என்னும் வினையைக்கூறுதற்கு இடையேநின்று வினைமாற்றுப்பொருளில்வந்தது. ஆங்கு என்பதுபோல என்னும் உவமச்சொல். அது கெடுத்ததுபோல வாழ்விக்கும் என்னும் மறுதலைப் பொருளில்வந்தது. ஆகையால், பெய்யாது கெடுத்ததுபோலப் பெய்துவாழ்விக்குமென்பது பெறப்பட்டது. செய்யவல்லது என்பது வருவிக்கப்பட்டது. கெட்டார்க்கு என்று உயர்திணைமேல் வைத்துக்கூறியதனுல், மக்களைக்கெடுப்பதும் எடுப்பதும் மழையென அதனது வலிமை கூறியவாறயிற்று. (ரு)

கசு. விசும்பின் துளிவீழின் அல்லால் மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

(இ-ள்) ஆகாயத்தின்கணுள்ளமேகத்தில் நின்றும் மழைத்துளிவிழுந்தால் காண்பதல்லது, வீழாதாயின் அப்பொழுதே பசியபுல்லினது தலையையுங்காண்டல் அரிது. (எ-று)

விசும்பு, விசும்பின்கணுள்ள மேகத்தைக்குறித்தது. மற்று என்பது, வீழின்என்னும் வினையைமாற்றி வீழாதாயின் என்னும் பொருளில்வந்தது. தலை-நுனி. புல்நுனி மிகச்சிறு பொருளாயினும் அதுவும் தோன்றுதென்னும் பொருள்பட இழிவு சிறப்பு உம்மை வருவிக்கப்பட்டது. மழையில்லையாயின் மக்கள் வாழாரென மேலைச்செய்யுளிற்கூறி, ஓரறிவுயிராகிய தாவரமும் வாழாதென இச்செய்யுளாற் கூறினர். கூறவே, இடையிலுள்ள மிருகம் முதலியனவும் வாழாவென்பது பெறப்பட்டது. (சு)

கஎ. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்து எழிலி
தான் நல்கா தாகிவிடின்.

(இ-ள்) அளவுகூறமுடியாத நெடியகடலுக்கும் தன் இயல்புகுறையும்; மேகமானது அக்கடல்நீரை முகந்து அதனிடத்துப் பெய்யவில்லையாயின். (எ-று)

கடலும் என்றவிடத்துள்ள உம்மை, அதன் பெருமையைக் குறிக்கவந்த சிறப்பு. நீர்மை—இயல்பு. கடலின் இயல்பு குறைதலாவது, மீன் முதலாயின பிறவாமையும், மணிமுதலாயின உண்டாகாமையுமாம். தடிதல்—முகத்தல். எழிலி—மேகம். உலகத்திலுள்ள மக்கள் முதலிய உயிர்களுக்குமாத்திரமன்று, மழைக்கு முதலாகிய கடலுக்கும் மழைவேண்டுமென்பது இதனாற்கூறப்பட்டது. (எ)

கஅ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

(இ-ள்) மழைபெய்யவில்லையாயின், தேவர்கட்கும் இவ்வுலகத்தில் மக்களால் செய்யப்படும் நைமித்திகமாகிய திருவிழாவோடு கூடிய நித்தியபூசை நடவாது. (எ-று)

சிறப்பு—விசேடமாகச் செய்யப்படுந்திருவிழா. பூசனை நாள்தோறும் செய்யப்படும் பூசை. வானோர்க்கும் என்றவிடத்துள்ள உம்மை, தேவர்களின் உயர்வைக்குறித்தசிறப்பு மக்கள் முதலிய உயிர்களுக்கேயன்றியெனஇறந்ததுதழுவியஎச்சமுமாம். சிறப்பொடுபூசனையென்றாதலின், செல்லாது என ஒருமைமுடிபாகக்கூறினர். ஒடுக்கொடுத்திருப்பதையும், ஒருமைமுடிபையும் நோக்காது சிறப்பும் பூசனையுமென்று உரைகூறுதல்பொருந்தாது. நித்தியத்தை முன்னரும் நைமித்திகத்தைப் பின்னருங்கூறுதல் முறையாயிருக்கவும், இங்கே நைமித்திகத்தை முன்னர்க்கூறிய கருத்தென்னையெனின், நித்தியத்தில் நிகழுங்குறைதீர்தற்பொருட்டுச்செய்யப்படுவது நைமித்திகமாதலின் அச்சிறப்பு நோக்கி முன்னர்க்கூறப்பட்டதென்க. மக்கள் முதலிய உயிர்களுக்கே

யன்றி மழையைப்பெய்யச்செய்யும் தேவர்களுக்கும் மழைவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது. (அ)

கக. தானம் தவம் இரண்டும் தங்காவியன் உலகம்
வானம் வழங்காது எனின்.

(இ-ள்) பெரியவுலகின்கண் தானமும்தவமுமாகிய இரண்டு அறங்களும், மழைபெய்யவில்லையாயின் நிலைபெறமாட்டா. (எ-று)

தானமாவது, அறநெறியால்வந்தபொருள்களைத்தகுதியுடையபெரியார்க்கு உவகையோடுங்கொடுத்தல். தானம்வேறு ஈகை வேறு. ஈகைவறியார்க்குக்கொடுத்தல். தவமாவது, மனம் பொறிவழிபோகாது அடங்குதற்பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கல் முதலாயின. தானம் இல்லறத்தாராலும, தவம் துறவறத்தாராலும், பெரும்பான்மைபற்றிச்செய்யப்படும். சிறுபான்மையாக இல்லறமுடையார் தவஞ்செய்தலும், துறவறமுடையார் தானஞ்செய்தலுங்கூடும், இல்லறந் துறவறம் இரண்டும் மழையில்லையாயின் நடைபெறாதென்பது இதனால் கூறப்பட்டது. (கூ)

உம. நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

(இ-ள்) இதுகாறுங் கூறியவாற்றால் எவ்வகைமேம்பாடு உடையாருக்கும் நீரையின்றி உலகஇயல் நடைபெறாதென்பது தெளியப்படுதலின், அதுபோல, அந்நீருக்குக்காரணமான ஒழுக்கு மழையையின்றி உண்டாகாது. (எ-று)

உலகஇயலாதலாவது, உயிர்கள் வாழ்தல் கடவுட்பூசையும இல்லறம்துறவறங்களும் நடைபெறுதல்முதலாயின. எனின் என்பது தெளியப்படுதலின் என்னும் பொருள் குறித்தது. ஒழுக்கு, இடையீடின்றித்தாரைபோலொழுகுவது. அதுவேநீர்ப்பெருக்கை உண்டுபண்ணும். உலகியல் நடைபெறுதற்கு நீர்வேண்டும்; நீருக்குக்காரணமான ஒழுக்கிற்கு மழைவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டவாறாயிற்று. மழையென்பதுநீர்தங்கிய மேகம். இனி, ஒழுக்கு என்பதற்கு ஒழுக்கம் எனப்பொருள்கொண்டு மழையை

யின்றி ஒழுக்கம் நிரம்பாது என்பாரும்உளர். மேல் எட்டுஒன்பது செய்யுட்களால் கூறப்பட்டவை ஒழுக்கங்களாதலால் மீண்டுங் கூறவேண்டாமையானும், நீரையின்றி உலகியல் அமையாதென் பதனோடு தொடர்பின்மையானும் அவ்வுரை பொருந்தாது.

இவ்வதிகாரத்தில் ஏழுசெய்யுட்களால் மண்ணுலகத்துள்ள உயிர்கள் நிலைபெறுதற்கும், எட்டாவது செய்யுளால் கடவுட் பூசைநடைபெறுதற்கும், ஒன்பதாவது செய்யுளால் இல்லறம் துறவறங்கள் நடைபெறுதற்கும் மழை இன்றியமையாது வேண் டப்படுமெனக்கூறி, பத்தாவது செய்யுளால், முதற்செய்யுளில் உலகம் வழங்கிவருதல் மழையாலெனை உடம்பாட்டுமுகத்தாற் கூறியதை, நீரையின்றி உலகம் நடைபெறாது; அந்நீருக்குக்கார ணமான ஒழுக்கு மழையையின்றி உண்டாகாதென்ன எதிர்மறை முகத்தாற்கூறி வற்புறுத்தினர்.

---

## குறிப்புகள்.

---

### அந்தோ! அநுதாபம்.

நம் சமூக முன்னேற்றத்தில் முனைந்து நின்றவரும், வேளா ளர் சங்கம், வேளாள வாலிபர் சங்கம் இவைகளை நிறுவினவரும கடற்றுறைமுகக்கழக உறுப்பினரும் சைவப்பற்றுடையாருமா கிய திருவாளர். சி, த. சிதம்பரம்பிள்ளையவர்கள் சென்ற ஐப்பசி. ௴ 1௳ இரவு 10–30 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீக்கினர். பிள் ளையவர்கள் பிரிவு வேளாளர் சமூகத்திற்குப்பெரிய நட்டமாகும். பிள்ளையவர்களுக்கு வயது 40. நான்கு பாலப்பருவமுடைய மக்க ளையும், மனைவியையும பரிதபிக்கவிட்டுவிட்டு விண்ணுற்றது விச னிக்கத்தக்கது. பிள்ளையவர்கள் சுமார் மூன்று வருடங்களாகவே நோய்வாய்ப்பட்டு நொந்திருந்தனர். அதோடு வியாபாரத்திலும் பொதுக்காரியங்களிலும் உழைத்து உழைத்து உடல்வன்மை குன்றவே, கடந்த நாலுமாதங்களாக நாலுவித நோயால் நசுக்கு ண்டு இறுதியில் இன்னுடல் துறந்தார். பிள்ளையவர்கள் பிறிவாற்

ருணர்குறித்துப் பெரிதும் வருந்துகின்றோம். பிள்ளையவர்கள் பிரிவாற்றாமை குறித்து வேளாள வாலிபர் சங்கம் சைவசித்தாந்த சபை அநுதாபத்தீர்மானங்கள் நிறைவேற்றியதோடு பிள்ளையவர்களின் உருவப்படத்தை சங்கங்களில் வைக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பெற்றன. இளமையில் இன்னுடல்விட்டு விண்ணுலகுற்ற இன்னுயிர் இறைவனடிபெற்று இன்புற்று வாழ்க.

---

## சமூக மக்களுக்கு,

நம் சமூகம் தோன்றியதுமுதல் இதுவரை தோன்றாத நமது சமூக நலன்கருதிய வேளாளனுக்குச் சமூகமக்களெல்லாம் சந்தாதார்களாகச் சேர்ந்தாதரிக்கவேண்டியதிருக்க, ஏழு பிரதிகள்பெற்ற பின்னரும் சந்தாத்தொகையை, (வெற்றிலைபாக்குப் பொடிச்செலவில் நூற்றில் ஒரு பங்காகிய சிறு தொகையாகிய நாள் ஒன்றுக்கு ஒரு பைசாவை வருடத்திற்கு இரண்டு ரூபாயை) கொடுத்துதவ மனமில்லாமல் இன்னும பிரதிகளை வாபஸ் செய்கின்றார்கள். அந்தோ! இவர்கள் மனநிலை இருந்தவாறு என்னே? ஏழு பத்திரிகை பெற்ற பின்னரும் சந்தாவை அனுப்பாமலிருப்பது முறையா என்று எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம். ஆதரிக்க ஒருவாறு அசந்தர்ப்பமாகவிருந்தால் முதல், இரண்டாவது பிரதிகளையன்றோ வாபஸ்செய்யவேண்டும். இவைகளால் நமக்குமிகுந்த நஷ்டநஷ்டங்கள் உண்டாகும் என்பதை எண்ணிப் பார்த்து இது பார்த்தவுடனாவது சந்தாவை அனுப்பித் தரும்படி வேண்டுகின்றோம். இறைவனருளால் மேலாலுள்ள நாலு சஞ்சிகைகளும் முறையே தவறாமல் வெளிவருமென்பதில் ஒரு சிறிதும ஐயமில்லை.

## சந்தா நேயர்களுக்கு.

நேயர்களிற் சிலர் சிற்சில சமயங்களில் சிற்சில பிரதிகள் கிடைக்கவில்லையென எழுதுகின்றனர். யாருக்கும் முறையே தவறாமல் அனுப்பிவருவதில் ஐயமில்லை. பிரதிகள் கிடையாமற் போகும் காரணந் தெரியவில்லை. ஆகையால் நேயர்கள் பிரதி

கிடைக்காத உடனேயே நமக்கு விபரமாக எழுதினால் பிரதி அனுப்பிவைப்பதோடு தபால் இலாகா அதிகாரிகளையும் விசாரிப்பதற்கு வசதி ஏற்படும் என்பதை அறிவிக்கின்றோம்.

## செட்டி நாட்டு அரசர் செய்கை

செட்டி நாட்டு அரசர் ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் உடல் நலங் கருதிய உபகாரங்கள் பல நாட்டிற்கு நல்கி வரினும், உயிர்நலங் கருதிய உபகாரச் செயலாகிய சிதம்பர ஆலயத் திருப்பணியில் ஈடுபட்டு இன்புற்று இறைத்தொண்டாற்ற முன் வந்து முனைந்து நிற்பது குறித்துப் பெரிதும் போற்றுகின்றோம்; கோவில் வேண்டாம், குளம் வேண்டாம் என்று குதர்க்கம் பேசும் இக்காலத்தில் கோவில் கட்டும் வகைக்குப் பல்லாயிரக் கணக்காகப் பணத்தைச் செலவிட முன்வந்த செட்டிநாட்டரசர் செய்கையே சிறந்த செய்கை; செட்டிநாட்டரசர் சிறப்புடன் வாழ்க

## நம் மக்கள் குறை.

நம சமூக மக்களிடம் அமைந்துள்ள குறைகள் பல. அவற்றுள் ஒன்று, திரு. சி. த. பிள்ளையவர்கள் பிரேத அடக்கத்தின் போது பிரேதத்தில் தீ வைத்து மண் பூசிப் புகைக் கண்டபின் செலவு செய்து பின்னர் எல்லோரும் திரும்பி வருவது வழக்கமாகவிருக்க கொள்ளி வைத்த பிள்ளைகள் மூடி எடுத்து முடிவதற்குள் பெரும் பகுதியினர் திரும்பிவிட்டனர். திரும்பியவர்கள் தீ மூண்ட புகைக் கண்டபின் செலவு செய்து முடிந்தவுடன் திரும்பிவிட்டனரெனினும் மூடி எடுத்து முடிவதற்குள் திரும்பி வருவது அவ்வளவு முறையானதன்று. கொஞ்சம செல்வாக குடையவர்கள் நிலையில் இவ்விதமென்றால் சாதாரண மக்கள் நிலை எவ்வாறாகும்? பிரேதத்திற்கு உரியவர்கள் தவிர மற்றவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். உடையவன் தானாகவே மனம் நொந்து மனவருத்த மாற்ற யாருமற்று தன்னந்தனியனாய் வந்து குளித்துக்கொண்டு வீடு சேரவேண்டிய நிலையை ஒவ்வொருவர்களும் ஊன்றிப்பார்க்கவேண்டுகின்றோம். முற்காலத்தில்

முடிவடைந்தபின் உற்றார் உறவினர் உடையவர் ஊரார் எல்லா ரும் ஒன்றுபோல் வரவேணுமென்று கட்டுப்பாடுகள் வைத்தது ஒற்றுமையின் வளர்ச்சிக்காகவும், உடையவர் உற்றார்களுக்குள்ள துயரத்தை ஆறுதல் மொழிகளால் சிறிது மாற்றவுமேயாகும். ஆதலான் அனைவரும் மேலால் கவனித்து நடக்க வேண்டு கின்றோம்.

## காந்தியடிகளும் காங்கிரஸ் ஆணையும்.

வருகிற டிசம்பர் ௴ நடைபெறவிருக்கும் லாகூர் காங்கிரஸ் மஹாசபை காந்தியடிகளின் உள்ளக் கிடக்கையைத் தெள்ளிதிற் றெறிந்து நடை முறையில் மக்கள் கைக்கொள்ளும் திட்டங்களை நிறைவேற்றி வைக்க விரும்புகின்றோம். அஹிம்சா தர்மமுறை யில் நிறைவேற்றிவைக்கும் பயனுள்ள திட்டங்களாகவே யிருக்க வேண்டும். காந்தியடிகள் சட்டசபை விலக்கு முதலிய ஒத்து ழையாமையிலும் கதர் அபிவிருத்தி முதலிய நிர்மாணத் திட்டத் திலுமே ஊன்றிக்கிடக்கின்றாரென்பதை ஊன்றிப் பார்க்க வேண் டுகின்றோம்.

## சமூகப்பற்று.

முத்துலாபுரம் ஆலய தர்மகர்த்தாவும் பிரபல வியாபாரியு மாகிய திருவாளர் மு. சிவசங்கரம்பிள்ளையவர்கள் நமது வேளாள னுக்கு வலிந்து சந்தாதாராகச் சேர்ந்து தங்கள் பகுதியில் நூறு சந்தாதார்களுக்குக் குறையாமல் சேர்த்துத் தருவதாய் வாக் குறுதி கொடுத்து மிகவும் ஊக்கத்துடன் வேளாளனை நடத்தும் படி சொல்லி நமக்கு ஊக்கத்தை யுண்டுபண்ணிவிட்டார்கள். பிள்ளையவர்கள்போல் பலர் இவ்விதம் சமூகப்பற்றுடன் முயன் றால் பெரிதும் "வேளாளன்" விருத்தியடைவான், பண்டுதொட்டு இன்றுவரை தோன்றாத புதிய பத்திரிகை யென்பதை சமூகமக் கள் ஊன்றியுணர்ந்து வேண்டுவன செய்ய விரும்புகின்றோம்.

## பாகம்பிரியாள் சங்கத்தாரின் பயனுள்ள வேலை.

இப்பெயர்கொண்டு தூத்துக்குடியில் நடைபெற்று வரும் மாதர் சங்கத்திலுள்ள சில பெண்மணிகள் ஸ்ரீபாகம்பிரியாள் அம்

மையாருக்குத் திருக்கால் திருக்கை தங்கத்தில் செய்துவைக்க ரூ. 3000 வரை வசூல்செய்யக் கருதி சுமார் 700 ரூபாய்க்கு கையெழுத்து வாங்கியிருக்கின்றார்கள். இவர்கள் கைக்கொண்டுள்ள சிவத்தொண்டிற்கு சிவநேசர்களெல்லாம் தகுந்த உதவி செய்து நிறைவேற்றிவைக்க வேண்டுதலோடு இத்தொண்டாற்ற முன் வந்த மாதர் சங்கத்தாரை மனமாறப் போற்றுகின்றோம்.

## அரசப்பிரதிநிதியாரின் அறிக்கை

சமீபத்தில் சொந்த நாடு சென்று சுகமாக வந்த அரசப்பிரதிநிதி இர்வின்பிரபு இந்தியாவிற்கு "குடியேற்றநாட்டு அந்தஸ்து"க் கொடுப்பதாய் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். அவ்வறிக்கையைப்பற்றி மூன்றுவிதமாக மக்கள் அபிப்பிராயப்படுகின்றனர். அறவே அகற்றிவிடவேண்டுமென்றும், அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், சீர்திருத்தத்துடன் நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் என மூன்றுமே மக்கள் உள்ளக்கிடக்கை. இம்மூன்றில் இறுதியாக உள்ள உள்ளக்கிடக்கையை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். இஃது காந்தியடிகளின் கருத்தாகும். காந்தியடிகள் கருதும் நிபந்தனைகள் மூன்றிற்கும் உடன்பட்டுக்கொண்டால் இர்வின் பிரபுவின் அறிக்கை போற்றுதற்குரியதே. இன்றேல் லாகூர் காங்கிரஸின் தீவிர நடபடிக்கைகளை நடைபெறவிடாமல் தடுப்பதற்குரிய தந்திரமென்றே கூறுவோம்.

## பிரிவு உபசாரம்.

நமது சமூக கனவான் சப் இன்ஸ்பெக்டர் திரு. ஆறுமுகம் பிள்ளையவர்கள் சுமார் ஆறுமாதங்களாக தூத்துக்குடியில் பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் தகுந்தமுறையில் தொண்டாற்றியது போற்றுதற்குரியது. பிள்ளையவர்கள் தற்பொழுது மாற்றப்பெற்றமை குறித்துச் சிறிது வருந்தினும் தொண்டின் திறங்குறித்து மகிழ்கின்றோம். பிள்ளையவர்கள் பற்பல பேறுபெற்று பல்லாண்டு வாழப் பரமன் அருள்பாலிப்பானாக.

ஸ்ரீவைகுண்ட நேயர்களுக்கு வந்தனம்,

நாம் சமீபத்தில் செய்த சுற்றுப்பிரயாணத்தின்போது ஸ்ரீ வைகுண்டத்தில் திருவாளர். சங்கரலிங்கக்கவிராஜரவர்கள் துணைகொண்டு பறபலரை கண்டுபேச நேர்ந்தது. அதுபொழுது அன்பர்கள் பலர் (சுமார் ஐம்பது) நமது வேளாளனுக்குச்சந்தாதார்களாக மிக மனமகிழ்ச்சியுடன் சேர்ந்துதவியதுகுறித்து அன்னவர்கட்கு நம்மது அன்பான வந்தனமளிக்கின்றோம். அன்றியும நாம் நிகழ்த்திய சொற்பொழிவின்பின் திருவாளர்களான A. சண்முக சுந்தரமுதலியாரவர்கள் புருஷோர்த்தம முதலியாரவர்கள் கண்ணபிரான் பிள்ளையவர்கள் நம்மிடத்து அளவிலா ஆர்வங்கொண்டு இல்லாதனவற்றை இயற்றிப்புகழ்ந்து பலபேசியது நாம் மறுப்ப தொன்றாயினும் அவர்கள் அன்பின் திறம்குறித்து நாம அகமகிழ்கின்றோம். அன்பர்கள் அனைவரும் முயன்று அதிகச்சந்தாதார்கள் சேர்த்துதவி ஆதரிக்க அன்புடன் வேண்டுகின்றோம.

---

## சந்தை இரச்சல்.

நவம்பர் 1௳ நடைபெற்ற நகரபரிபாலன சபையின் தலைவர் பதவிக்கு அபேக்ஷகராக நின்ற ஒருவரிடம் இரண்டு கவுன்சிலர்கள் ஓட்டுப்போடும் வகைக்த ஒருவர் (சங்கக்காரியதரிசி) ரூபாய் இரண்டாயிரமும், மற்றொருவர் (ஒன்பது வருடக்கவுன்சிலர்) ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறும் வாங்கிக்கொண்டார்களாம. தேர்தல் சமாதானமாக முடிந்துவிட்டபடியால் கொடுத்த பணத்தைத் திரும்பக்கேட்டதற்குக் கொடுக்க மறுக்கின்றார்களாம் என்று சந்தையில் பேசிக்கொள்கிறார்கள்.

தூத்துக்குடியில் வேளாளர்களுக்கு வேளாளர்சங்கம் வேளாள வாலிபர் சங்கம், திருநெல்வேலியில் வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கம், இதற்குமேல் "வேளாளன்" பத்திரிகை இவை எல்லாமிருந்தும் அவர்களுக்கு வேலை செய்யும் நாவிதர்கள் சகல ஜாதியாருக்கும் தற்பொழுது வேலைசெய்கிறார்களே; பத்து வருடங்களுக்குமுன் கட்டுப்பாடாகவே இருந்தது; நம் ஜாதியிலும், வேறு பிறஜாதியாகிய ஆசாரிமார், நாடார்கள் முத

லிய ஜாதிக்குரிய நாவிதர்கள் பிறஜாதியார்களுக்கு வேலை செய்வதில்லையே இதன் விபரம் வேளாளர்கள் ஏன் கவனிக்கவில்லை என்று ஒருவர் சந்தையில் பேச;

அதைக்கேட்ட மற்றொருவர் இவ்வளவுதான் உமக்குத்தெரியும்போலும் தூத்துக்குடியில் நாவிதர்களுக்குப் பிணஞ்சுடும் கூலி ரூபாய் மூன்றாகயிருந்தது. தற்பொழுது சொற்பகாலத்தில் ரூபாய் ஐந்தாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமா முன் நாவிதர்கள் ஊர்ச்சொல்வார்கள். இப்பொழுது சொல்லமாட்டார்கள். இதுபோல் இன்னும் எத்தனையோ யிருக்கின்றன. யாருக்கு வந்த விருந்தோ? என்று சும்மாவிருப்பதே அவர்கள் வழக்கம். அவர்கள் நாவிதர்களைப்போல் நம் நாவிதர்களும் ஆரம்பித்துவிடக்கூடாதென்க் கூறிக்கொண்டிருக்குஞ் சமயம் சந்தை கலைந்துவிட்டது.

---

## மதிப்புரை.

---

"பாண்டியன்." இஃதொரு மாதப் பத்திரிகை. இதன் கௌரவ ஆசிரியர் திருவாளர் ம. சின்னத்தம்பித்தேவர் அவர்கள் B.A., B.L., வக்கீல். இதன் பிரதிகள் மூன்றும் முறையே வரப்பெற்றோம். இஃது சிறப்பாக மறவர் முன்னேற்றங் கருதியும் பொதுவாக தமிழ்மக்கள் முன்னேற்றங்கருதியும் உழைக்கின்றது. கல்வி பயின்று கண்ணியமாய் வாழாமல் களவு தொழிலையே குலத்தொழில் எனக்கொண்டு வாழும் பெரும்பகுதியினராய மறவர் குலமக்களுக்கு இப்பத்திரிகை இன்றியமையாது வேண்டப்படுவதே. மறவர்குல மஹாநாட்டில் கதர் அபிவிருத்திகுறித்து ஒரு தீர்மானம் நிறைவேறியிருப்பதுபோல பாண்டியன் பத்திரிகையும் கதர் அபிவிருத்தியில் கருத்தைச் செலுத்துமெனக் கருதுகின்றோம். இதன் வருடச் சந்தா ரூ. 2—0—0. மானேஜர், பாண்டியன் ஆபீஸ், தூத்துக்குடி என்பது விலாசம்.

---

# நிலவுலக நிகழ்ச்சிகள்.

## புதிய பெல்ட்

இரவில் சாலைகளில் மனிதர்கள் அபாயமின்றி நடந்து செல்வதற்காக இடுப்பில் அணிந்துகொள்ளும்படியான ஒரு (பெல்ட்) கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த பெல்டின் முன்புறமும், பின்புறமும் பிரகாசமான ரிப்லெக்டர்ஸ் பொருத்தப்பட்டிருக்கும். இதனால் முன்னாலோ பின்னாலோ வரும் மோட்டார் வண்டிகளின் விளக்குகள் அவைகளின் மேல் பட்டவுடனே வண்டிகள் வருகிறதெனச் சுலபமாய் அறிந்துகொள்ளலாம். உபயோகத்திலில்லாதபோது அந்த 'பெல்ட்டை' சட்டைப் பையிலாவது, ஒரு சிறு கைப் பெட்டியிலாவது எடுத்துச் செல்லலாம்.

## கிழவரைப் பால்யமாக்கும் முறை.

தென் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் எச். ஜாவொர்ஸ்கி என்னும் விஞ்ஞான சாஸ்திரியார் இளமை உண்டாக்கும் சிறந்த முறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார். வாலிபர்களின் இரத்தத்தைக் கொண்டு முதியவர்களின் நரம்புக் குழாய்களின் மூலம் தேகத்தில் செலுத்துவதால் பால்யம் உண்டாகிறதென்று கூறுகிறார். "மீண்டும் பால்யத்தை அடைவது" என்றால் ஆயுளை வளர்ப்பதல்ல. கிழப் பருவத்தினாலுண்டாகும் நரம்புத் தளர்ச்சியை எதிர்த்துப் போராடுவதே என்று சாஸ்திரியார் கூறுகிறார். இவரைக் குறித்து லண்டனிலுள்ள டாக்டர் கூறுவது வருமாறு:—டாக்டர் ஜாவொர்ஸ்கி முதன் முதலாக 1922-ம் ஆண்டில் மேற்கூறிய சோதனையைப் பாரிஸிலுள்ள குதிரைகளிடத்தில் செய்து பார்த்தார். இரண்டு வயதுள்ள ஒரு பெண் குதிரையின் இரத்தத்தை எடுத்து மற்றொரு கிழமான பெண் குதிரையின் நரம்புக் குழாய்களின் வழியாகச் செலுத்தினர். இவ்வண்ணம் பதினாறு முறை இரத்தஞ் செலுத்தப்பட்ட பின்னர் அக்கிழக் குதிரை மீண்டும் நன்றாக வேலைக்கு உபயோகப்பட்டதுடன் பல குட்டிகளையும் ஈன்றது. இச் சோதனை 1923-ம ஆண்டில் நடத்தப்பட்டபோதிலும் அக் குதிரை 1927-ம் ஆண்டு வரை பலத்துடன் உழைத்து வந்தது. இவ்வண்ணமே ஒரு

கிழ வெள்ளாட்டுக்கும் 12 முறை இரத்தஞ் செலுத்திய பின் பலமடைந்ததுடன், ஓர் ஆண்குட்டியும் பெற்றது. இரத்தங் கொடுப்போரின் முழுச் சம்மதம் பெறறே அவர் காரியத்தைச் செய்யத் தொடங்குவார். அவர் தமக்குத் தமே சோதனை செய்து கொள்ளும் வழக்கமும் உண்டு. சில வைத்திய முறைகளைச் செய்தபின்னர், அவருடைய வழுக்கைத் தலையில் மயிர் முளைப்பதைக் கண்டார்.

## தொண்ணூறுவித மோட்டார் காட்சி.

சென்ற வாரம் லண்டனில் நடைபெற்ற மோட்டார் கண்காட்சியில் 90 விதத்திற்கு மேற் செய்யப்பட்ட வெவ்வேறு மோட்டார்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் அறுபதுவித மோட்டார்கள் மற்ற நாடுகளுடையவை. மோட்டார்களின் விலை 35000 பவுனிலிருந்து 100 பவுன் வரை இருந்தது.

## புலியுடன் போர்புரிந்த வீரர்.

பூனாவுக்கு மேற்கேயுள்ள ஒரு கிராமத்தில் ஒரு புலிக்கும் மகாராஷ்டிர குடியானவருக்கும் நடந்த போராட்டத்தின் விவரம் வருமாறு:—மாரங்க் என்னும் மகாராஷ்டிரக் குடியானவருக்குச் சொந்தமான ஒரு காளையைப் புலி ஒன்று கொன்றுவிட்டு, அவருடைய வயலில் பதுங்கிக்கொண்டது. இதைக் கேள்வியுற்ற அக்குடியானவர் ஒரு தடியை எடுத்துக்கொண்டு புலி யிருக்குமிடத்துக்குச் சென்றார். அப்போது புலி தூங்கிக்கொண்டிருந்தது. எந்தமிருகத்தையும் தூங்கிக்கொண்டிருக்கும்போது கொல்லுவது அவருடைய குலத்திற்கு முற்றிலும் விரோதமானதாம். எனவே அவர் புலியின்மீது ஒரு கல்லை வீசியெறிய, அது எழுந்துவிட்டது. அவர் 20 நிமிஷம்வரை போர்புரிந்தபின்னர் அதைக் கொன்றார். புலி அவர்மீது குறிவைத்துப் பாயும்போது, கொஞ்சம் நகர்ந்து அதன் தலையில் அவர் பலமான அடி கொடுத்து வந்தார். இங்ஙனமே ஒவ்வொருமுறை பாயும்போதும் நகர்ந்து கொண்டே முடிவில் அதன் மண்டையைப் பிளந்துவிட்டார். அவர் தேகத்தில் பலவிடங்களில் புலியின் நகங்களால் காயமேற்பட்டிருக்கிறது. அவர் பூனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

### பட்சிகளிற் பேதம்.

கிரேட் பிரிட்டனில் 360 வகையான பட்சிகள் இருக்கின்றன. இவற்றில் 140 வகைகள்தான் ஆண்டுமுழுதும் பிரிட்டனிலேயே வசிக்கின்றனவாம்.

### காட்டு மிருகங்கள்.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான காட்டு மிருகங்கள் அனுப்பப்படுகின்றனவாம். ஆனால் அமெரிக்காவுக்குத்தான் அதிகமான காட்டு மிருகங்கள் அனுப்பப்படுகின்றனவென்று தெரியவருகிறது.

### ஐம்பது வருஷகாலத்திற் பூக்கும் மரம்.

ஸீயம் தேசத்திலுள்ள மூங்கில் மரமொன்று 50 வருடங்களுக்கொருதரம் பூக்க ஆரம்பிக்குமாம்.

### செயற்கை ஏரி.

ஆல்ப்ஸ் மலையில் சமுத்திரமட்டத்துக்கு 800 மைல் உயரத்தில் ஸ்விட்ஜர்லந்து தேச எஞ்சினியர்கள் ஒரு செயற்கை ஏரியைத்தயாரித்து வருகின்றனராம்.

### குதிரைக்குத் தாதிவேலை.

குதிரை தாதிவேலை செய்துவருகிறது என்ற செய்தியைக் கேள்வியுறுபவர் எவரும் இறும்பூதெய்துவர் என்பதில் ஐயமில்லை. ஆனால் மேல்நாட்டில் கிப்பன் ஹாமுக்கருகே, டான்ஸி என்னுமிடத்தில் இது சர்வசாதாரணமாக இருக்கிறது. ஸ்ரீ ஜே. பட்லர் என்னும் ஆங்கிலேயர் ஒருவர் மூன்று மாதத்தில் நான்கு வயதுடைய ஒரு குதிரையை, குழந்தைகள் வண்டிகளைத் தாதிகளைப்போல் தள்ளிச் செல்வதற்கும், கூட்டத்தில் தமக்குத்தெரிந்தவர்களைக்கண்டு பிடிக்கவும், தன்னுடைய வயதையும், எஜமானனுடைய வயதையும் காலினால் குறிப்பிடுவதற்கும், மேஜையின் மேல் ஏறி நிற்பதற்கும் பழகசி வைத்திருக்கிறார். அவர் ஒன்பது வயதுள்ள மற்றொரு குதிரையை ஒருசிறு வண்டியில் உட்கார்ந்து கொண்டு கைகுலுக்கக் கற்றுக்கொடுத்திருக்கிறார்.

### விளக்கைத் தேகத்தில் வைத்தல்.

இங்கிலாந்தில் நார்போல்க் சீதேபதி பிராணிகள் விபத்துக்குள்ளாகாதிருக்க வெளிச்சமில்லாத வீதிகளில் செல்லும்போது

பின்புறம் சிவப்பு வெளிச்சம் காண்பிக்கக்கூடிய விளக்கொன்றை தேகத்தில் பொருத்திவைத்துக்கொள்ள வேண்டுமெனக் கூறுகிறார்.

### முத்த எதிர்ப்புச் சங்கம்.

ருஷ்யர்கள் இப்பொழுது முத்தம் கொடுப்பதையும் கூடா ஒழுக்கமென, முத்த எதிர்ப்பு சங்கங்களையும் ஸ்தாபித்து முத்தமிடும் வழக்கத்தை ஒழித்துவருகிறார்கள். இதற்காக இச்சங்கத்தார், 'முத்தம் கொடுப்பது வீழ்க' 'இந்த வெட்கங்கெட்ட ஆபத்தான பழக்கம் ஏன்'? என்று பெரும் விளம்பரங்களை நானா பக்கங்களிலும் பிரசுரம் செய்கின்றனர்.

### திருநெல்வேலி ஜில்லா ஜனத்தொகை விபரம்.

திருநெல்வேலி ஜில்லா விஸ்தீரணம் 4,325 சதுர மைல்கள் சதுரமைல் ஒன்றுக்கு ஜனத்தொகை 440. மொத்தஜனத்தொகை 1;901156 ஆண். 926405 பெண், 974751 பிறப்பு, 77215.- 10000-க்கு 400 இறப்பு 51139. ஆண் 102. பெண் 100. இறந்தவர்களில் 10000-க்கு காலரா 13. வைசூரி 2. காயச்சல் 50. வயிற்றளைச்சல் 19. சுவாசநோய் 18 ரணங்கள் 2. பிரசவம் 2. மற்றவை 163. மொத்தம் 369. ஆண் 279. பெண் 259 என்று அரசாங்க அறிக்கையொன்று கூறுகின்றது.

---

திருவாளர் சி. வ. நல்லபெருமாள்பிள்ளையவர்கள் முனிசிபல் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றமை குறித்து சென்ற ஐப்பசி மீ 25உ மாலையில் S. A. V. கலாசாலையில் ஒரு தேக்கச்சேரி நடைபெற்றது. 500 பேர்களுக்கு அதிகமாக வந்திருந்தனர். தேக்கச்சேரி முடிந்ததும் திருநெல்வேலி ரெங்கத்தம்மாளால் பாட்டுக்கச்சேரி நடத்தப்பெற்றது. இடையில் பிள்ளையவர்கள் தேர்தலைப்பற்றி திருவாளர்களான S. குமாரசாமி பிள்ளையவர்கள், ஜெகவீரபாண்டியனவர்கள், N. S. நாராயணசாமி ஐயரவர்கள், மு. பொன்னம்பலம் பிள்ளை முதலியவர்களால் சிறிதுநேரம் பேசப்பெற்றது. இறுதியில் பிள்ளையவர்கள் எல்லோருக்கும் வந்தனம் கூறினார்கள். சுமார் 8-30 மணிக்கு கூட்டம் கலைந்தது.

திண்டுக்கல் வியாபாரி திரு. கந்தசாமி பிள்ளையவர்களை அடித்த டர்ன்புல் என்னும் ஐரோப்பியருக்கு அபராதம் ரூ 25 தூத்துக்குடி சப் கலெக்டர் துரையால் விதிக்கப்பெற்றது.

---